# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 03 புதன்கிழமை 16.04.2025 கதிர் 168







# நிரந்தர வெற்றியை உறுதிப்படுத்துவோம்!

## உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பரப்புரையில் சிறீதரன் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஏப். 16

தற்காலிகப் பின்னடைவு-களுக்காக நாம் நிரந்தர வெற்றியை இழக்க முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை முன்னிட்டு, கரைச்சி பிரதேச சபையின் உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரை யாற்றுகையில்,

7➤

# அச்சுறுத்தி வாக்கு வேட்டை நடத்தும் அநுர அரசாங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 16

"தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படும் ஜனாதிபதி அநுர அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றார். எனினும், ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரச நிதியில்லாமல் உகந்த சேவையைப் பெற்றுத் தருவோம்." - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

7➤

### யாழ். குருநகரில்

## துருப்பிடித்த நிலையில் ரி – 56 ரக துப்பாக்கி மீட்பு



யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் துருப்பிடித்த நிலையில் ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளது.

குருநகர், ஐந்து மாடிக் கட்டடத் தொகுதிக்கு

7➤

# வடக்கில் பௌத்த அடையாளங்கள் தமிழ் அரசியல்வாதிகளால் அழிப்பு

## இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் வீரசேகர



கொழும்பு, ஏப். 16

"வடக்கு, கிழக்கில் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதற்கு இருக்கும் ஒரே சாட்சிதான் பௌத்த சின்னங்கள். அதனால்தான் அவற்றைத் தமிழ்ப் பிரிவினைவாத அர சியல்வாதிகள் அழித்து வருகின்றனர்." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

7➤

## இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிக்கொலை

காலி, ஏப். 16

இளம் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காலி - கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திவியகஹவெல பிரதேசத்தில் நேற்று செவ்வாயக் கிழமை இரவு இந்தச்

7➤




# மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து இருவர் பரிதாப மரணம்

## இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

கொழும்பு, ஏப். 16

குருநாகல் - தம்புள்ளை ஏ - 6 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று தொரட்டியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளையில் இருந்து

7➤







# இரண்டு நாட்களில் 412 பேர் அனுமதி

கொழும்பு, ஏப் 16

ஏப்ரல் 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் பதிவான பல்வேறு விபத்துக்களில் காயமடைந்து மொத்தம் 412 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் (NHC) அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய சுகாதார ஆணைக்குழுவின் விபத்துப் பிரிவு பணிப்பாளர் வைத்தியர் இந்திக ஜாகொட தெரிவித்தார்.

அவர்களில் ஆறு பேர் அனுமதிக்கப்பட்டபோதே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஊடகங்களிடம் பேசிய அவர், பதிவான பெரும்பாலான வழக்குகள் உள்ளக விபத்துகளுடன் தொடர்புடையவை என்றும், 94 வழக்குகள் வீதி விபத்துகள் காரணமாக பதிவாகியதாகவும் கூறினார்.

கூடுதலாக, உயரத்திலிருந்து விழுந்தது உட்பட, 110 நோயாளிகள் கீழே விழுந்ததால் அனுமதிக் கப்பட்டனர். அவர்களில், குறைந்தது 80 பேருக்கு அறுவை சிகிச்சை தேவைப்பட்டது.

இந்த ஆண்டு பட்டாசு தொடர்பான காயங்கள் குறைந்துள்ளதாகவும் பட்டாசு காயங்கள் காரணமாக இரண்டு நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாகவும், அந்த வழக்குகளும் பாரதூரமான வை அல்ல என்றும் வைத்தியர் இந்திக குறிப்பிட்டார். (ஐ)

# போலி செய்திகள் குறித்து துணை அமைச்சர் முறைப்பாடு

கொழும்பு, ஏப் 16

சமூக ஊடகங்களில் தன்னை குறிவைத்து பரவும் தொடர்ச்சியான போலி செய்திகள் குறித்து துணை அமைச்சர் சத்துரங்க அபேசிங்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.






தவறான தகவல் பிரச்சாரம் வேண்டுமென்றே இட்டுக்கட்டப்பட்ட உள்ளடக்கத்தை உள்ளடக்கியது என்று துணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"பல ஆண்டுகளாக, மக்கள் ஜேவிபி தலை வர்களை சேறு பூசித் தாக்கினர். 2021 முதல், எங்களைப் போன்ற புதியவர்களை இழிவுபடுத்தவும் முயன்றனர். ஆனால் இறுதியில், மக்கள் தங்கள் பதிலைக் கொடுத்தனர். ஊழல் ஒட்டுண்ணிகளால் வழிநடத்தப்படும் அரசியலின் சகாப்தம் முடிந்து விட்டது. இனிமேல், இந்த நாட்டில் அரசியல் நம்மை விடவும் சிறப்பாக, கொள்கைகளை நிலைநிறுத்தும் படித்த, புத்திசாலி நபர்களால் செய்யப்படும்" என்று அவர் கூறினார். மேலும், சில சமூக ஊடகப் பக்கங்கள் பணத்தைத் துரத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில், இது போன்ற நடவடிக்கைகள் குறித்த பொதுமக்களின் விழிப்புணர்வு அவர்களின் கடமைகளை எளிதாக்க உதவும் என்றும் அவர் கூறினார்.

சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டு வருவதாகவும், பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் தொடர்பாக தெளிவுபடுத்தல்கள் செய்யப்பட வேண்டியிருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# விசேட அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

கொழும்பு, ஏப் 16

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், கடலில் ஏற்படும் அவசர நிலைமைகளின் போது விரைவான நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கும், இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்களம் (SLCG), அதன் செயல்பாட்டு அறையுடன் நேரடியாக இணைக்கப்பட்ட 24 மணி நேர விசேட அவசர தொலைபேசி இலக்கமான '106' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த இலக்கத்தினூடாக, கடல்சார் அவசர சூழ்நிலைகளில் பதிலளிக்கும் நேரத்தைக் குறைப்பதையும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் எதிர்ப்பிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள், மாலுமிகள் மற்றும் கடலோர சமூகங்களுக்கு உடனடி மற்றும் நேரடி தொடர்பை வழங்குவதன் மூலம், SLCG செயல்பாட்டுத் தயார்நிலையை மேம்படுத்தவும் கடல்சார் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தேசிய நோக்கங்களை வலுப்படுத்தவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பு, மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்ட ஒரு முக்கிய ஆணையுடன், கடலோர பாதுகாப்பு திணைக்களம் எண்ணெய் கசிவுகளை சுத்தப்படுத்துதல் மற்றும் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், மனித கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் கடலில் ஏற்படும் பிற அவசரநிலைகள் உள்ளிட்ட பல்வேறு கடல்சார் நிலைமைகளை கட்டுப்படுத்த பங்களிக்கிறது.

இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்களம் மீனவர்கள், கடலுடன், தொடர்புடையவர்கள் மற்றும் பொதுமக்கள் 106 என்ற அவசர எண்ணைப் பயன்படுத்தி கடல்சார் அவசரநிலைகளை உடனடியாகப் புகாரளிக்குமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218



# இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பு

கொழும்பு, ஏப் 16

87,500 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ள-தாக இலங்கை மத்திய வங்கி (CEB) அறிவித்துள்ளது. இந்த ஏல விற் பனை இன்று (16) நடைபெற வுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட40,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 27,500 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலத்தில் விற் பனை செய்யப்படவுள்ளன.

மேலும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 20,000 மில் லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற் பனையினூடாக வழங் கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஐ)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 800 பேருக்கு எதிராக வழக்கு



கொழும்பு, ஏப் 16

புத்தாண்டு ஆரம்பத்தை முன்னிட்டு நாடளாவியளவில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளில் 800 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 13 மற்றும் 14 தேதிகளில் மாத்திரம், மதுபோதையில் வாக-னம் ஓட்டிய 800 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள-தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு நாடு முழுவதும் மது போதையில் வாகனம் செலுத்து வோரைக் கண்டறியும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தமின்றி முன்னெடுக்க-ப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை போதைப் பொருள் பயன்படுத்தும் சாரதி-களை கண்டுபிடிக்கவும் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன எனவும் கூறியுள்ளார்.

மேலும், புத்தாண்டு கொண் டாட்டங்களின் பின்னர் சொந்த ஊர்களிலிருந்து கொழும்பு திரும்பும் பொதுமக்கள் காரணமாக வாகன நெரிசல் அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனால், வாக-னங்களை அபாயகரமாக செலுத் துவதை தவிர்க்குமாறும், விதி முறைகளை கடைபிடிக்குமா-றும் அனைத்து சாரதிகளிடமும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுக கொண்டுள்ளார். (ஐ)

## இலங்கை பொலிஸார் வெளியிட்டுள்ள அறிவிப்பு

தலதா மாளிகை யாத்திரைக்கு வருகை தருபவர்களின் வாக னங்களை இலகுவாக அடையாளம் காண புதிய நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, தலதா மாளிகை யாத்திரைக்கு வருகைதரும் பக்-தர்களின் வாகனங்களை இலகுவாக அடையாளம் கண்டு, வாகன தரிப்பிடங்களுக்கு அழைத்துச் செல்லும் வகையில் ஸ்டிக்கர் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, யாத்திரைக்கு செல்லும் பக்தர்கள் இந்த ஸ்டிக்கரை வாகனத்தின் முன்பக்க இடது மூலையின் மேல் தெளிவாகத் தெரியும் வகையில், சாரதியின் பார்வைக்கு இடையூறாகாத வகையில் ஒட்டப்பட வேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன், பக்தர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் இந்த ஸ்டிக்கரை ஒட்டுவது கட்டாயப்படுத்தப்படவில்லை என்று பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் அமைக்கப்பட்டுள்ள பொ-துமக்கள் பாதுகாப்புக் குழுக்களுடன் ஒருங்கிணைந்து தலதா மாளிகை யாத்திரைக்காகப் புறப்படும் வாகனங்களுக்கு இந்த ஸ்டிக்கரை வழங்குமாறு இலங்கை பொலிஸ் தலைமையகம் நாட்டிலுள்ள அனை-த்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளது. (ஐ)

# கிறிஸ்தவர்களின் தவக்காலம்



உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
உங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்து விடும்

கலங்காதே மகனே, கலங்காதே மகளே
என் இயேசு கைவிட மாட்டார்

1. கடந்ததை நினைத்து கலங்காதே
நடந்ததை மறந்துவிடு
கர்த்தர் புதியன செய்திடுவார்
இன்றே நீ காண்பாய– கலங்கிடவே வேண்டாம்

2. நொறுங்குண்ட இதயம் தேற்றுகிறார்
உடைந்த உள்ளம் தாங்குகிறார்
காயங்கள் அனைத்தையும் கட்டுகிறார்
கண்ணீர் துடைகின்றார் –(உன்)

3. திராணிக்கு மேலாக சோதிக்கப்பட
ஒருநாளும் விட மாட்டார்
தாங்கிடும் பெலன் தருவார்
தப்பி செல்ல வழி செய்வார் – (நீ)

4. நல்லதோர் போராட்டம் போராடுவோம்
விசுவாசம் காத்துக் கொள்வோம்
நீதியின் கிரீடம் நமக்கு உண்டு
நேசர் வருகையில் தந்திடுவார் – நம்

5. மாலையில் மகனே அழுகின்றாயா
காலையில் அக மகிழ்வாய்
நித்திய பேரானந்தம்
நேசரின் சமூகத்திலே

6. அக்கினியின் மேல் நடந்தாலும்
எரிந்து போக மாட்டாய்
ஆறுகளை நீ கடந்தாலும்
மூழ்கி போக மாட்டாய்

7. முழுமையாய் மனம் திரும்பிவிடு
முற்றிலும் வாழ்வை ஒப்புக்கொடு
வேண்டாத அனைத்தையும் விட்டுவிடு
ஆண்டவர் விருப்பம் நிறைவேற்று
எங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்

எங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்துவிடும்
கலங்கிடவே மாட்டோம்
நாங்கள் கலங்கிடவே மாட்டோம்



# ஆபாச பேச்சு அமைச்சர் பொன்முடிக்கு எதிராக அ.தி.மு.க., ஆர்ப்பாட்டம்



பெண்கள் குறித்து அவதூறாக பேசிய அமைச்சர் பொன்முடியை பதவி விலக வலியுறுத்தி, சென்னை சைதாப்பேட்டையில் அ.தி.மு.க., மகளிரணியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்களையும், ஹிந்து மதத்தையும் மிகவும் ஆபாசமாக பேசிய அமைச்சர் பொன்முடிக்கு, அனைத்து தரப்பிலும் கடும் எதிர்ப்பு எழுந்து வருகிறது. பொன முடியின் அமைச்சர் பதவியை பறிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

அந்த வகையில், 'பொன்முடியை அமைச்சரவையில் இருந்து நீக்க வலியுறுத்தி, இன்று (ஏப்ரல் 16), சென்னை சைதாப்பேட்டையில் அ.தி.மு.க., மகளிரணியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொன்முடி பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதனால் ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் பரபரப்பான சூழல் நிலவியது. (ஐ)

# அதிகரித்து வரும் காசநோய் பாதிப்பு 2025க்குள் கட்டுப்படுத்து வது சிரமம்



'தமிழகத்தில், காசநோய் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட, 2025ம் ஆண்டுக்குள், அதை கட்டுப்படுத்துவது சிரமம்' என, மக்கள் நல்வாழ்வு துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காசநோயை முழுமையாக ஒழிக்க, மத்திய, மாநில அரசுகள், பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. இந்தியாவில், 2030ம் ஆண்டுக்குள், காசநோயை ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தமிழகத்தில், 2025ம் ஆண்டுக்குள், காசநோயை கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதிகாரிகள் செயலாற்றி வந்தனர்.

காசநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் நோய் பாதிப்பை ஆரம்ப நிலையில் கண்டறிதல் தொற்று ஏற்படாமல் தடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக, காசநோயால் பாதிக்கப்படுவோரில், 84 சதவீதம் பேர், முதல் சிகிச்சையிலேயே குணமடைந்து விடுகின்றனர். மீதமுள்ள, 16 சதவீதம் பேர் தொடர் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில், 5.8 சதவீதம் பேர் உயிரிழப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், காசநோய் பாதிப்பு தொடர்ந்து வருவதால், நிர்ணயித்தபடி இந்த ஆண்டுக்குள் அதை கட்டுப்படுத்துவது சிரமம் என, மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து, அவர்கள் கூறியதாவது: காசநோயால் ஆண்டுக்கு, 80,000 பேர் வரை பாதிக்கப்பட்டு வருகின்றனர். உத்தர பிரதேசம், மஹாராஷ்டிரா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களை விட, தமிழகத்தில் பாதிப்பு குறைவு. ஆனால், நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்குள், காசநோயை கட்டுப்படுத்துவது பெரும் சவாலாக உள்ளது. கடந்த மூன்று மாதங்களிலேயே, 25,000க்கும் மேற்பட்ட காசநோயாளிகள் கண்டறியப்பட்டு உள்ளனர். பாதிக்கப்படும் நோயாளிகளை கண்டறிவதன் வாயிலாக, மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தடுக்க முடியும்.

எனவே தான், ஒவ்வொரு பகுதியாக சென்று, பரிசோதனை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. ஒரு சில ஆண்டுகளில், காசநோயை கட்டுப்படுத்திய மாநிலம் என்ற பெருமையை தமிழகம் பெறும். இவ்வாறு அவர்கள் கூறினர். (ஐ)



# தமிழில் மட்டுமே கையெழுத்து இட அரசாணை!

"தமிழில் மட்டுமே இனி அரசாணைகளை வெளியிட வேண்டும் என்றும், அரசு ஊழியர்கள் தமிழில் மட்டுமே கையெழுத்திட வேண்டும்" என்றும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து தனக்கு வரும் தலைவர்களின் கடிதங்களில் ஆங்கிலத்தில் கையெழுத்து இருப்பதாக பிரதமர் மோடி பேசி இருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து துறை செயலாளர்கள், கலெக்டர்களுக்கு தமிழக அரசு சுற்றறிக்கை ஒன்று அனுப்பி உள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

துறை தலைமை அலுவலகங்களில் இருந்து, பிற அலுவலகங்களுக்குச் செல்லும் கருத்துருகளும் தமிழில் இருக்க வேண்டும். பொதுமக்களிடம் இருந்து தமிழில் வரும் கடிதங்களுக்கு தமிழிலேயே பதிலளிக்க வேண்டும் அரசு ஊழியர்கள் தமிழில் மட்டுமே கையெழுத்திட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அண்மையில் தமிழகம் வந்த பிரதமர் மோடி, ராமேஸ்வரம் பாம்பன் ரயில் பாலம் திறப்பு விழாவில், "எனக்கு சில தலைவர்கள் தமிழகத்தில் இருந்து கடிதம் எழுதுவது ஆங்கிலத்தில் இருக்கும்.

கையெழுத்து கூட ஆங்கிலத்தில் தான் போடுகின்றனர். தமிழ் மொழியில் போடக்கூடாதா என, நான் வியப்பதுண்டு" என பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழகத்தில் கூட்டணி ஆட்சியா் இ.பி.எஸ்., 'பளீச்' பதில்!

"டில்லிக்கு பிரதமர் மோடி, தமிழகத்துக்கு நான் என்று அமித் ஷா தெளிவாக கூறிவிடடார். தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்று அமித் ஷா கூறவில்லை," என நிருபர்கள் சந்திப்பில் அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., பதில் அளித்தார்.

அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, கே.என். நேரு மற்றும் பொன்முடிக்கு எதிராக அ.தி.மு.க., நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர அ.தி.மு.க., சார்பில் சபாநாயகர் அப்பாவுக்கு கடிதம் எழுதப்பட்டு இருந்தது. இன்று சட்டசபை கூடியதும் இது குறித்து விவாதம் எழுந்தது.

சட்டசபையில், அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., பேசியதாவது: சட்டசபை விதி 72ன் கீழ், அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் அளித்துள்ளோம். இது குறித்து சட்டசபையில் விவாதம் நடத்த அனுமதி அளிக்க வேண்டும் என தெரிவித்தார். இதற்கு, "சபாநாயகர் அனுமதி அளித்தால் மட்டுமே விவாதத்திற்கு எடுத்து கொள்ள வேண்டும்" என துரைமுருகன் கூறினார்.

பின்னர் விதியின் கீழ், நம்பிக்கையில்லா தீர்மானம் எனது பரிசீலனையில் இருக்கிறது என சபாநாயகர் பதில் அளித்தார். அமைச்சர்கள் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாததை கண்டித்து சட்டசபையில் இருந்து அ.தி.மு.க., எம்.எல்.ஏ.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.



பின்னர் நிருபர்கள் சந்திப்பில் இ.பி.எஸ்., கூறியதாவது: அ.தி.மு.க., சார்பில் சட்டசபையில் அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தோம். தீர்மானத்திற்கு சபாநாயகர் அனுமதி தர மறுத்ததை கண்டித்து அ.தி.மு.க., எம்.எல்.ஏ.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.

ஹிந்து மதத்தை இழிவுப்படுத்தும் விதமாக அமைச்சர் பொன்முடி பேசியது கண்டனத்திற்குரியது. பெண்களை இழிவுபடுத்தும் விதமாக பேசிய அமைச்சர் பொன்முடி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். முக்கிய பிரச்னைகள் குறித்து பேச எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.,க்களுக்கு அனுமதி தருவதில்லை. இவ்வாறு இ.பி.எஸ்., கூறினார்.

அ.தி.மு.க., - பா.ஜ., கூட்டணி குறித்து, நிருபர்கள் சந்திப்பில் இ.பி.எஸ்., கூறியதாவது: நாங்கள் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைப்போம். இவர்கள் ஏன் எரிச்சல் அடைகிறார்கள். தி.மு.க.,வுக்கு பயம் வந்துவிட்டது. எங்கள் கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தில் கூட்டணி வைத்துள்ளோம். யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைப்போம் அது எங்கள் விருப்பம். இவ்வாறு அவர் கூறினார்.

அமித் ஷா கூட்டணி அரசு அமைக்கப்படும் என கூறியதாக நிருபர்கள் எழுப்பி கேள்விக்கு, இ.பி.எஸ்., அளித்த பதில்: கூட்டணி அரசு அமைப்பதாக அமித் ஷா கூறவில்லை. நீங்கள் ஏதோ தப்பாக புரிந்து கொண்டு ஏதோ வித்தை காட்டுக்கிறீர்கள். இந்த வித்தையை எல்லாம் விட்டுருங்க.

அ.தி.மு.க., பா.ஜ., கூட்டணி, ஆட்சி அமைக்கும். அதை புரிந்து கொள்ளுங்கள். டில்லிக்கு பிரதமர் மோடி, தமிழகத்துக்கு நான் என்று அமித் ஷா தெளிவாக கூறிவிட்டார். இதில் ஏதே விஞ்ஞான மூளையை எல்லாம் பயன்படுத்தி கண்டுபிடிப்பதை விட்டுருங்க, நாங்கள் பார்த்து கொள்கிறோம். இவ்வாறு இ.பி.எஸ்., கூறினார். (ஐ)

# பிரசவத்துடன் முடிவதில்லை



கர்ப்பம் தரித்த நாளில் இருந்து ஆரம்பிக்கும் ஹோர்மோன்களின் நர்த்தனம் குழந்தை பிறந்த பிறகாவது நிற்குமா என்றால் நிற்காது. சிலருக்குக் கர்ப்ப காலத்தைவிட அதன் பின்னும் கூடுதல் ஆட்டம் காட்டும். சுகப்பிரசவம் என எளிதாகச் சொல்கிறார்கள். ஆனால், இயற்கையாகக் கருப்பை மலர்ந்து குழந்தை தானாக வெளியே வருவது என்பது இப்போது அரிதாகத்தான் இருக்கிறது. பிறப்புறுப்பைச் சற்றுக் கிழித்து (மயக்க மருந்து எல்லாம் தரமாட்டார்கள் (நிளைமைவழஅல) அது ஆசனவாய் வரை நீண்டு சில தையல்களுடன்தான் முடியும். அதையும் இயற்கை பிரசவம் என்கிறார்கள்.

அந்தத் தையலை காலை, மாலை தினமும் சுத்தம் செய்ய வேண்டும். அமர்ந்து பால் கொடுக்க முடியாது. அதில் உதிரமும் நாப்கினும் சேர்ந்து தீராத எரிச்சலைத் தர, அந்தக் கரடுமுரடான தையலுடன்தான் குறைந்தபட்சம் குழந்தை பிறந்த பத்து நாட்கள் வரை போராட வேண்டும். என்ன ஒன்று தையல் வெளியே தெரியாது அவ்வளவே.

பல்வேறு காரணங்களால் அதுவும் சாத்தியப்படாத நிலையில் தான் சிசேரியன் மூலம் குழந்தை எடுக்கப்படுகிறது. அதே போல சிசேரியனுக்குப் பல்வேறு காரணங்கள் இருக்க, மருத்துவர்கள் பணத்திற்காக சிசேரியன் செய்கிறார்கள் எனக் கூறுவதுபோல முட்டாள்தனம் வேறு இல்லை. முன்பெல்லாம் இவ்வளவு சிசேரியனா நடந்தது என்று கேட்பவர்களிடம், முன்பு பிரசவத்தின் போதும், பிரசவத்திற்கு பிறகும் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன, ஒரு பெண் எத்தனை குழந்தைகள் பெற்றாள், அதில் எத்தனை உயிருடன் இருந்தது என்று கேட்டுப் பாருங்களேன். பதிலே வராது, சிசேரியன் பல சிக்கலான குழந்தை பிறப்புகளைச் சாத்தியப்படுத்தி உள்ளதுடன், பிரசவத்தின் போதான தாய் சேய் மரணத்தையும் குழந்தை கொடி சுற்றிக்கொண்டு இருந்தால், பாதம் முதலில் வந்தால் பெண்கள் அனுபவிக்கும் இரண்டு மூன்று நாள் மரண வலியைக் குறைத்துள்ளது. சிசேரியனால் பிரச்சினை இல்லையா என்றால் இருக்கிறது. ஆனால், உயிர் போகும் பிரச்சினை எதுவும் இல்லை.

சிசேரியனுக்காகப் பெண்ணின் முதுகுத் தண்டில் போடப்படும் எபிடியூரல் ஊசியினால், சிலர் பிரசவம் முடிந்து பல மாதங்கள் ஆகியும் முதுகு வலியில் அவஸ்தைப்படுவது உண்டு. ஆனால், முறையான உடற்பயிற்சி செய்தால் அந்த முதுகு வலியில் இருந்தும் விரைவில் மீண்டுவிடலாம்.

செத்துப் பிழைத்தல் என்பார்களே, அதைத்தான் ஒவ்வொரு பெண்ணும் பிரசவத்தின் போது அனுபவித்து வெளிவருகிறாள். பிரசவ வலியும் அதன் தாங்கு திறனும் அனைத்துப் பெண்களுக்கும் ஒரே மாதிரி இருக்காது. அவரவர் உடல், மன வலிமை, ஆரோக்கியம் சூழல் சார்ந்தது.

குழந்தைப் பேறு காரணமாக அவள் உடலில் நடக்கும் மாற்றங்கள், வலி அனைத்தையும் சுமந்து பிள்ளை பெறும் பெண் என்ன மாதிரி மனநிலையில் இருப்பாள்? என்ன மாதிரி பிரச்சினைகளை எதிர்கொள்வாள்? அவளுக்கு ஆதரவாக என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து கொள்பவர்கள் எத்தனை பேர்?

பிரசவம் வரை பெண்களிடம் காட்டும் அக்கறையைக்கூடப் பிரசவத்திற்குப் பின்னர் பலர் காட்டுவதில்லை என்பதுதான் நிஜம். பிரசவத்தை, குழந்தை பிறப்பை நிகழ்வாக, விழாபோலக் கொண்டாடிவிட்டு, அதன்பின் குழந்தைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தில் கொஞ்சம்கூடத் தாய்க்குத் தருவதில்லை.

**சிசேரியனுக்காகப் பெண்ணின் முதுகுத் தண்டில் போடப்படும் எபிடியூரல் ஊசியினால், சிலர் பிரசவம் முடிந்து பல மாதங்கள் ஆகியும் முதுகு வலியில் அவஸ்தைப்படுவது உண்டு. ஆனால், முறையான உடற்பயிற்சி செய்தால் அந்த முதுகு வலியில் இருந்தும் விரைவில் மீண்டுவிடலாம்.**

**செத்துப் பிழைத்தல் என்பார்களே, அதைத்தான் ஒவ்வொரு பெண்ணும் பிரசவத்தின்போது அனுபவித்து வெளி வருகிறாள். பிரசவ வலியும் அதன் தாங்கு திறனும் அனைத்துப் பெண்களுக்கும் ஒரே மாதிரி இருக்காது. அவரவர் உடல், மன வலிமை, ஆரோக்கியம் சூழல் சார்ந்தது.**



கர்ப்ப காலத்திலாகட்டும், பிரசவத்திற்குப் பின்னாகட்டும் அதிகளவில் ஹோர்மோர்ன் ஏற்ற இறக்கங்களை பெண்கள் எதிர்கொள்கின்றனர். பலருக்கும் அது தானாகவே சரியாகிவிடும் என்றாலும், சிலருக்கு நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சிக்கலை ஏற்படுத்தும். உடல் ரீதியாகச் சிலருக்கு ஏற்படும் பிரச்சினைகள் என்றால், தையலில் சீழ் கோத்துக்கொள்வது, அதீத உதிரப்போக்கு, தலைமுடி கொட்டுதல், மார்பு காம்பு வெடித்துக் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமல் வலியில் துடிப்பது எனப் பல்வேறு உடல் உபாதைகளை எதிர்கொள்வார்கள்.

அதிலும் முதல் முறை குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டும் பெண்களில் சிலருக்குப் பிரசவ வலியின் வேதனைகளும் உபாதைதகளும் முற்றிலும் விலகாத நிலையிலேயே மார்பக முலைக்காம்பின் மிருது தன்மை குறைந்து, கடும் வலியை அனுபவிப்பார்கள். அந்த வலி பிரசவ வலிக்கு ஈடானதாக, சில நேரத்தில் அதைவிடக் கொடூரமானதாக இருக்கும்.

மார்பகத்தின் முலைக்காம்புகள் வெடித்துப் புண் உருவாகும். குழந்தை பால் அருந்தும் போது இந்த வலி உயிர்போவது போல இருக்கும். இதற்கு நோய்த் தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், மார்பகங்கள் பெரிதாவதால் முலையில் வறட்சி ஏற்பட்டு, அதனால் வெடிப்பும் புண்ணும் வரும் என்றுதான் கூறப்படுகிறது. வலி காரணமாக குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும் என்பதே அந்தப் பெண்ணுக்குப் பெரும் பீதியைத் தரக்கூடியதாக இருக்கும். சிலர் இதற்குப் பயந்து தாய்ப்பால் தருவதை நிறுத்தும் அளவு சென்று விடுவார்கள்.

இதற்காகப் பால் தருவதை நிறுத்தத் தேவையில்லை, மருத்து வரை அணுகி பிரச்சினையைச் சரி செய்துவிடலாம் என்பதுடன் புண் இருந்தாலும் குழந்தைக்குப் பால் கொடுப்பதால் எந்த ஆபத்தும் இல்லை என்பதெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும், நமது சமூகத்தில் குழந்தைக்குத் தாய்ப்பால் தருவதையோ நிறுத்துவதையோ சம்மந்தப்பட்ட பெண் மட்டும் எளிதில் முடிவு செய்துவிட முடியாது. மாமியாரும் கணவரும் சேர்ந்து தன் குழந்தை தாய்ப்பால் குடித்துதான் வளர வேண்டும் என்ற நிர்பந்திக்கும் கொடுமையும் உண்டு.

உடல் ரீதியான உபாதைகள் பிறர் கண்ணுக்குத் தெரிவதால் அதற்கு மருத்துவ ஆலோசனைகளும் தீர்வுகளும் கிடைக்க வாய்ப்பு இருக்க, வெளியே தெரியாமல், சம்மந்தப்பட்ட பெண்ணுக்குமே தெரியாமல் அவளுக்குள் நடக்கும் களேபரங்கள் பற்றிய புரிதல் பலருக்கும் இருப்பதில்லை. நம் நாட்டில் பெண்களுக்கு இந்தப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு இல்லாததுடன், நமது கலாசாரம், வாழ்க்கை முறையில் இது தவறுதலாகப் புரிந்துகொள்ளப்பட்டு, உறவு சார்ந்த சிக்கலாகப் புரிந்துகொள்ளப்படுவதுதான் வேதனை,

கர்ப்ப காலத்தில் மன அழுத்தம் எதிர்கொண்டவர்கள், எதிர்கொள்ளாதவர்கள்கூடப் பிரசவகாலத்திற்குப் பின் மன அழுத்தம் அதாவது **postpartum depression** எதிர்கொள்வார்கள். அந்தப் பெண்ணே தனக்கு என்ன நடக்கிறது, தான் ஏன் இவ்வாறு இருக்கிறோம் என உணர முடியாமல் திணறும் போது, வீட்டில் இருப்பவர்கள்தாம் அவள் மாற்றத்தை உணர்ந்து மனநல ஆலோசனைக்கு

(7ஆம் பக்கம் பார்க்க...)



# பயங்கரவாதிகள் தாக்குதல்: நைஜீரியாவில் 51 பேர் பலி

நைஜீரியாவில் பழங்குடியினத்தைச் சேர்ந்த பயங்கரவாத குழு நடத்திய கொடூர தாக்குதலில் 51 பேர் பலியாகினர்.

மேற்கு ஆப்ரிக்க நாடான நைஜீரியாவின் வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் புலானி என்ற முஸ்லிம் பழங்குடியின குழு அரசு மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடி வருகிறது. இவர்கள் அந்நாட்டில் உள்ள மற்றொரு பயங்கரவாத குழுவான போக்கோ ஹராமில் இருந்து வேறுபட்டவர்கள். போக்கோ ஹராம் மேற்கத்திய கல்விக்கு எதிராகவும், இஸ்லாமிய சட்டத்தை அமல்படுத்தவும் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

கடந்த 2023 டிசம்பர் முதல் 2024 பிப்ரவரி வரை நைஜீரியாவின் மத்திய மாகாணமான பிளாட்டோவில் 1,336 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில், நேற்று முன்தினம் பிளாட்டோ மாகாணத்தில் ஜிக்கே கிறிஸ்தவ பண்ணை குழுவினர் இருந்த பகுதிக்குள் புலானி குழுவினர் துப்பாக்கிகளுடன் நுழைந்து கண்மூடித்தனமாக சுட்டனர். இதில் எட்டு குடும்பங்களைச் சேர்ந்த, 51 பேர் உயிரிழந்தனர். 16 பேர் படுகாயமடைந்தனர்.

அதன் பின், அப்பகுதியில் இருந்த வீடுகளுக்குள் நுழைந்து கொள்ளையடித்துவிட்டு, இந்த கும்பல் தப்பிச் சென்றது. இந்த கொடூர செயலில் ஈடுபட்ட நபர்களை உடனே கண்டுபிடித்து தண்டிக்க அதிபர் போலா தினுபு பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## பொது விஷயத்தில் தலையிட்டால் வரி விதிக்கப்படும் ஹார்வர்டு பல்கலைக்கு டிரம்ப் எச்சரிக்கை



"பொது விஷயங்களில் தலையிட்டால் வரி விதிக்கப்படும்" என நிதியுதவி நிறுத்திய பிறகு, ஹார்வர்டு பல்கலைக்கு அதிபர் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலை, அரசியல் மற்றும் பயங்கரவாத ஆதரவு கருத்துகளை ஊக்குவிப்பதாக கூறியுள்ள, அந்நாட்டு அதிபர் டிரம்ப், அதற்கு அளித்து வந்த, 18,500 கோடி ரூபாய் அரசு நிதியுதவியை நிறுத்தினார். தற்போது இன்னொரு மிரட்டல் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை: பல்கலைக்கழகத்திற்கு என வரி விலக்கு உரிமை இருக்கிறது. இது பறிக்கப்படும். பல்கலைக்கு அரசு ஆதரவு வேண்டும் எனில், பல்கலை பொது விஷயத்தில் தலையிடாமல் இருக்க வேண்டும். நினைவில் கொள்ளுங்கள். பொது விஷயங்களில் தலையிட்டால் வரி விதிக்கப்படும். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார்.

இதற்கிடையே, ரஷ்யாவுக்கு எதிரான போரில் கூடுதல் ஏவுகணைகளை உக்ரைன் வாங்க விரும்புகிறது என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு அதிபர் டிரம்ப் அளித்த பதில்: எப்போதும் ஏவுகணைகளை வாங்க வேண்டும் என்பதில் ஜெலன்ஸ்கி அதிக கவனம் செலுத்துகிறார். தங்கள் நாட்டை விட 20 மடங்கு பெரிய நாட்டுடன் போர்புரிந்தால் பிற நாடுகள் ஏவுகணைகள் வழங்கிக் கொண்டே இருக்கும் என அவர் நினைப்பது தவறு.

ரஷ்ய- உக்ரைன் போரில் லட்சக்கணக்கானோர் உயிரிழந்ததற்கு ரஷ்ய அதிபர் புடின், அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோ பைடன், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஆகிய 3 பேரும் தான் காரணம். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## 4 மாதங்களில் 85,000 இந்தியர்களுக்கு விசா வழங்கியது சீனா!

4 மாதங்களில் 85,000 இந்தியர்களுக்கு விசா அளித்துள்ளதாக இந்தியாவுக்கான சீன தூதர் வெளியிட்டுள்ள வலைதள பதிவு, அதிகம் பேரை ஈர்த்துள்ளது.

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையேயான மறைமுக போர் இன்னமும் ஓயவில்லை. மறைமுகமாக இருந்த இந்த போர், பரஸ்பர வரி என்ற டிரம்ப் நடவடிக்கை மூலம் வெளிச்சத்துக்கு வந்தது.

டிரம்பின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், சீனாவும் அமெரிக்கா மீது வரியை விதித்தது. தங்கள் நாட்டு மக்கள், அமெரிக்காவுக்கு அவசியமின்றி பயணிக்க வேண்டாம் என்றும் கூறி இருந்தது.

இந் நிலையில், இந்தியாவுக்கான சீன தூதர் சுபெய்ஹோங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவு அதிகம் பேரை கவர்ந்துள்ளது. அதில் கூறப்பட்டு உள்ளதாவது

2025ம் ஆண்டு ஜன.1 முதல் ஏப்ரல் 9 வரை இந்திய தூதரகம், 85000க்கும் அதிகமான இந்தியர்களுக்கு விசா வழங்கி இருக்கிறது. இன்னும் அதிக இந்திய நண்பர்களை சீனாவுக்கு வரவேற்கிறோம். அங்கு பாதுகாப்பான, தோழமையான சீன நாட்டின் அனுபவத்தை பெறுங்கள்.

இவ்வாறு அந்த பதிவில் குறிப் பிடப்படடுள்ளது. (ஐ)






## அமெரிக்க 'போயிங்' நிறுவன விமானங்களுக்கு சீனா தடை

சீனா - அமெரிக்கா இடையே வர்த்தக போர் ஏற்பட்டுள்ள நிலையில், அமெரிக்க விமான நிறுவனங்களான போயிங் உள்ளிட்டவற்றின் விமானங்களை வாங்குவதை சீனா நிறுத்தி வைத்துள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் பரஸ்பர வரி என்ற பெயரில் அனைத்து நாடுகளுக்கான இறக்குமதி வரியை உயர்த்தினார்.

பின் அமெரிக்காவுடன் பேச்சு நடத்திய 60க்கும் மேற்பட்ட நாடுகளின் வரியை நிறுத்தி வைத்தார். பேச்சு நடத்த முன் வராத சீனாவுக்கு மட்டும் வரி உயர்வில் விலக்கு அளிக்க வில்லை. மாறாக சீனாவுக்கான வரியை 145 சதவீதமாக டிரம்ப் உயர்த்தினார். பதிலுக்கு சீனா அமெரிக்கா மீது 125 சதவீத வரி விதித்தது.

ஸ்மார்ட்போன், செமி கண்டக்டர் எனப்படும் மின்னணு சிப்கள், கணினிகள் ஆகிய உயர் தொழில்நுட்ப பொருட்களுக்கான வரியில் இருந்து மட்டும் சீனாவுக்கு அமெரிக்கா விலக்கு அளித்துள்ளது.

இந்நிலையில் சீனா தன் உள்நாட்டு விமான நிறுவனங்களிடம் அமெரிக்காவில் இருந்து போயிங் மற்றும் பிற நிறுவனங்களின் விமானங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

## துருப்பிடித்த...

அருகில் உள்ள படகுத்துறையில் பழுதடைந்த நிலையில் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த படகு ஒன்றை அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் அப்புறப்படுத்த முனைந்தபோது படகின் அடியில் துப்பாக்கி காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் யாழ். பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் குழுவினர் துப்பாக்கியை மீட்டதுடன் துப்பாக்கியுடன் ஒரு தொகை தோட்டாக்களையும் மீட்டனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் நீண்ட காலமாக மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்தமையால் துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றன.

துப்பாக்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மூன்று...

குருநாகல் நோக்கிப் பயணித்த கப் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோவின் சாரதியும் அதில் பயணித்த இருவரும் மோட்டார் சைக்கிளின் செலுத்துநரும் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஓட்டோவின் சாரதியும், ஓட்டோவில் பயணித்த நபர் ஒருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிரியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 37 மற்றும் 43 வயதுடைய இருவரே உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பில் கப் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தொரட்டியாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## இளம்....

சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கரந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் கரந்தெனிய, திவியகஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் ஆவார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்வது தொடர்பில் கரந்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கில்...

கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"வடக்கு, கிழக்கில் குறிப் பாக வடக்கில் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்ப தற்கு இருக்கும் ஒரே சாட்சி தான் பௌத்த சின்னங்கள். அதனால்தான்

வடக்கிலுள்ள பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த சின்னங்களை அழித்து, அதற்கு மேல் கோயில்களை அமைத்து, அங்கு பழைய கோவில்கள் இருந்தன எனக் கூறி வருகின்றனர்.

இலங்கை என்பது பௌத்த நாடாகும். திஸ்ஸ விகாரையில் திறப்பு விழாவொன்றை நடத்த முடியவில்லையெனில், தமிழர்கள் கூச்சலிடுகின்றனர் என்பதற்காகப் பிக்குகளுக்குத் தானம் வழங்க முடியவில்லையெனில் என்ன நியாயம்? தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புத்த சாசனம் பாதுகாக்கப்படவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

அதேவேளை, ,லங்கையில் தேசிய கீதம் இரு மொழிகளில் ,சைக்கப்படுகின்றது. இது பெரும் தவறாகும். அரசமைப்பை மீறும் செயலாகும். ,ந்தியாவில் எத்தனை மொழிகள் உள்ளன. ஆனால், பெங்காலி மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. அனைத்து மொழிகள் பேசுபவர்களும் தேசிய கீதம் இசைக்கப்படும்போது உணர்வுபூர்வமாக இருப்பார்கள்." - என்றார்.

## நிரந்தர...

"தமிழினப் படுகொலைக்கான நீதியைக் கோரிப் பெற்று, எமது அரசியல் இலக்கை அடையும் வரை தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள நாம், காலச்சூழலும் - களச்சூழலும் தந்திருக்கும் தற்காலிகப் பின்னடைவுகளைக் காரணம் காட்டி நிரந்தர வெற்றியை இழக்கும் நிலைக்கு வந்துவிடக்கூடாது.

அரசியல் களத்தின் உள்ளும் புறமும் எத்தனை பெரும் சவால்கள் எழுந்தாலும், இலக்கு நோக்கிய எம் பாதையும், பயணமும் அறம் சார்ந்ததாக அமையுமானால் அடைய வேண்டிய அரசியல் உரித்துகளை அடைந்தே தீருவோம்." - என்றார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட வாலிபர் முன்னணித் தலைவரும் வேட்பாளருமான குணபாலசிங்கம் குணராஜ் தலைமையில் கட்சியின் மூத்த உறுப்பினரும் வேட்பாளருமான கணேசு துரைலிங்கம் உள்ளிட்ட உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான அருணாசலம் வேழமாலிகிதன், வேட்பாளர்களான சாலினி சாருகன், இராசதுரை ஜெயசுதர்சன், யோகேஸ்வரன் நிரோஜன் மற்றும் கட்சியின் வட்டாரக் கிளை உறுப்பினர் தர்மராசா சிறீதரன் ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன், வட்டாரக் கிளை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அச்சுறுத்தி...

"எதையும் சரியாகச் செய்யத் தெரியாது, பொய்யும் ஏமாற்றுமே தொடர்ந்து வருகின்றது. அரசும் ஜனாதிபதியும் மக்களை அச்சுறுத்தி வருகின்றனர். ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு மாத்திரமன்றி முழு மக்களுக்கும் சேவையாற்றுவதே ஜனாதிபதியின் பொறுப்பாகும். எனவே, இந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்களின் வாக்குப்பலத்தால் வெற்றி பெறச் செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்." - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

பொத்துவில் தேர்தல் தொகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"எமது நாட்டு மக்கள் ஜே.வி.பியையும், திசைகாட்டியையும் ஆதரித்து ஆட்சியை வழங்கினர். வளமான நாட்டைக் கட்டியெழுப்புகின்றோம் என்று கூறினர். ஆனால், இன்று இந்த அரசு முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்த எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. ஊழல்வாதிகளை பிடிப்போம் என்றனர். போதுமான எந்த ஏற்பாடுகளும் இதுவரையில் இல்லை.

பொருட்களின் விலைகள் அதிகரித்து வருமானம் குறைந்துள்ள நிலையில் இலட்சக்கணக்கான மக்கள் தமது மூன்று வேளை உணவையும் பெற்றுக்கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர். வறுமை அதிகரித்து, வருமான மூலங்கள் குறைந்து, வாழ்வாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், இந்த அரசு பொய், மோசடிகளைக் கோலோச்சி மக்களை ஏமாற்றி வருகின்றது." - என்றார்.



# இரட்டைப் படுகொலை: 2 சகோதரர்கள் கைது!

கொழும்பு, ஏப். 16

வீடொன்றில் தந்தை மற்றும் மகன் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

அநுராதபுரம் - இராஜாங்கனை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலேயே மேற்படி இருவரும் இராஜாங்கனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராஜாங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய தந்தையும், 26 வயதுடைய மகனுமே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 27 மற்றும் 23 வயதுடைய இரண்டு சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட தந்தையும் மகனும் பல ஆண்டுகளுக்கு முன்னர் சந்தேகநபர்களின் தந்தையைத் தாக்கி கொலை செய்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இராஜாங்கனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரசவத்துடன்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அழைத்துச் செல்ல வேண்டும். இல்லை அந்த மன அழுத்தம் பல்வேறு விபரீதங்களுக்கு வித்திடும்.

பிரசவம் முடிந்தபின் எப்போதும் மௌனமாக அல்லாது சோகமாக இருப்பது, காரணமின்றி அழுவது, சரியாகத் தூங்காமல், அல்லது எப்போதும் தூங்கிக்கொண்டே இருப்பது, தனிமையில் ஒடுங்குவது, சரியாக உணவு எடுக்காமல் இருப்பது ஆகியவற்றைக் கண்காணித்து, அவரிடம் மனம்விட்டுப் பேசி என்ன மாதிரி சிக்கல்களைத் தனக்குள் வைத்துப் புழுங்கிக் கொண்டு இருக்கிறார் என்பதை உணரத் தலைப்பட வேண்டும். அவரின் பிரச்சி னைகளுக்கு உங்களால் தீர்வு காண முடியாது என்று தோன்றினால், தாமதிக்காமல் மருத்துவ ஆலோசனைக்குக் கூட்டிச் செல்ல வேண்டும். பிரசவத்திற்குப் பிறகான சோர்வு, இரவில் குழந்தைக்குப் பால் கொடுக்கவும் துணி மாற்றவும் அடிக்கடி எழுவதால் சரியான உறக்கமின்மை, அனுபவஸ்தர்கள் தரும் ஆலோசனைகளால் உண்டாகும் குழப்பங்கள், அதன் விளைவாகத் தான், சரியான தாய் இல்லையோ என்ற சந்தேகம், உடல் எடை கூடுவதால் ஏற்படும் பீதி, தனக்கென நேரம் இல்லாமல் போவது ஆகியவற்றால் மன அழுத்தங்கள் ஏற்படுவது சகஜம் என்றாலும், அதன் வீரியம் பொறுத்து மன அழுத்தம் இருக்கிறதா என்பதை மருத்துவரிடம் கலந்து ஆலோசிப்பது நல்லது.

ஏனென்றால் இந்த மன அழுத்தம் கவனிக்கப்படாமல் விட்டால் தற்கொலை, குழந்தையை வெறுப்பது, காயப்படுத்துவது, சில நேரத்தில் குழந்தையைக்கொலை செய்யும்தீவிர எண்ணம், தன்னைக் காயப்படுத்திக் கொள்வது, குழந்தை மீது நாட்டமின்றி இருப்பது, அதன் காரணமாகக் குற்ற உணர்வில் உழல்வது எனப் பல தீவிர மீள முடியாத மனநிலைக்குள் தள்ளிவிடும்.

மருத்துவர்கள் சாதாரண கேள்விகள் மூலம் பெண்கள் மன அழுத்தம் எதிர்கொள்கிறார்களா என்பதைக் கண்டறிய முயலும்போது, அவற்றுக்கு மனதைத் திறந்து நேர்மையாகப் பதில் சொன்னாலே எளிதில் புரிந்துகொள்வார்கள். ஆனால், ஐயோ நமக்கு இப்படியான எண்ணம் எல்லாம் வருகிறது என்று சொன்னால் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள், இதை மருத்துவரிடம் எப்படிச் சொல்வது என்று நம் குழப்பங்களை மறைக்க முயன்றால் அது நமக்குதான் சிக்கலை ஏற்படுத்தும். குழந்தை பிறந்து இரு வாரங்கள் கழித்தும் மனம் சார்ந்த அழுத்தங்கள், குழப்பங்கள் சீராகாமல் அதிகரித்தால், வேலைகளில் கவனம் செலுத்த முடியாமை, குழந்தையைக் கவனிக்க முடியாமை, தற்கொலை எண்ணங்கள், காரணமின்றி அழுகை போன்ற உணர்வுகள் இருந்தால் தயங்காமல் மருத்துவரிடம் கூறிவிடுங்கள். குடும்பத்தினரின் கண்காணிப்பு இந்தக் காலகட்டங்களில் அவசியமான ஒன்றாகும்.

அதற்கு முன் குழந்தை பெற்ற பெண்களுக்குப் போதிய ஓய்வு தேவை என்பதை குடும்பத்தினரும், உறவினர்களும் புரிந்துகொள்ளுங்கள். குழந்தையைப் பார்க்கச் செல்கிறேன் என நேரங்காலம் தெரியாமல் சென்று உறங்கும் தாயையும் குழந்தையையும் எழுப்பிவிடுவதைத் துளிக்கூட லஜ்ஜையின்றி செய்வதைத் தவிருங்கள். அதேபோல அவள் உடல் நிலை, மனநிலை பற்றி எதுவும் தெரிந்துகொள்ளாமல், குழந்தைக்குப் பேர் வைக்கிறோம், தீட்டு கழிக்க ஹோமம் பண்ணுகிறோம் என தொல்லை செய்யாமல் இருப்பது அந்தப் பெண்ணுக்கு நீங்கள் செய்யும் கூடுதல் உதவி.

# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**




இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி16.04.2025 இல் வெளியிடப்பெற்றது.